சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 122/2018

பெயர் திரு. சிவக்குமார் நாள்.
த/பெ. குமாரசாமி 20.07.2026

**<u>பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை தொடங்கும் நேரம் 12.07PM

1. வாதிகள் வழக்கு சொத்து வேறு ஒருவர் பெயரிலுள்ளதாக கூறி நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர். வாதிகள் சீதாராமன் பெயரில் பட்டா உள்ளதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளனர். நான் 2016 ல் சொத்தை 1ம் வாதிக்கு கிரையம் கொடுத்தேன். நான் கிரையம் கொடுக்கும் காலத்தில் சீதாராமன் பெயரில் தான் பட்டா இருந்தது. 1ம் வாதி, 2ம் வாதிக்கு சொத்தை கிரையம் கொடுத்து, 2ம் வாதி பட்டா மாற்றம் செய்ய முயற்சி செய்த போது தான் சீதாராமன் பெயரிலுள்ள பட்டா பற்றி எனக்கு தெரியும். 2010 ல் எங்கள் குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்தபோது சீதாராமன் பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு என் பெயரிலோ, என் தகப்பனார் குமாரசாமி பெயரிலோ மற்றும் என் பட்டனார் கோவிந்தசாமி பெயரிலோ பட்டா இருந்தது இல்லை என்று சொன்னால் சரிதான்.

2) என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள 85 ம் எண் பட்டாவை நான் பார்த்துள்ளேன். ஏன் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு ஆவணம் ஏதும் கிடையாது என்றாலும்,

அதனால் தான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணை மற்றும் எதிர்வழக்குரை விபரங்களை 2ம் வாதி வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா மாற்றம் செய்ய மனு அளித்த பின்பு தான் எனக்கு தெரிய வந்தது என்று சொன்னால் சரிதான். பதிலுரையில் என்னுடைய என்னுடைய முன்னோர்கள் பெயரிலுள்ள பட்டா பற்றி 2010 ம் ஆண்டு எழுதபட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்திற்கு வில்லங்க விபரங்களை சீதாராமன் பெயரிலுள்ள பட்டா பற்றி தெரிந்த பின்பு தான் போட்டு பார்த்தேன்.

3) வழக்கு சொத்துக்களை நானோ என் முன்னோர்களோ கிரையம் வாங்கியதாக ஆவணங்கள் இல்லை. 09.06.1928 தேதியில் வழக்கு சொத்தை வரதப்பன் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். வரதப்பன் மகன் முனுசாமி என்றால் சரிதான். முனுசாமியின் மகன் தான் சீதாராமன் என்றால் சரிதான். 1934 வருடத்தில் வரதப்பன் மற்றும் முனுசாமி ஆகியோர் வழக்கு சொத்தை பொறுத்து அடைமானம் வைத்தாரகள் என்றால் சரிதான். அதன் பிறகு முனுசாமி வழக்கு சொத்தை 1977 ம் ஆண்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் அடைமானம் வைத்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு நான் நகர ஊரமைப்பில் அனுமதி பெற்றுள்ளேன். 2010 ம் ஆண்டு தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தை வைத்து தான் அந்த அனுமதி பெற்றேன் என்றால் சரிதான். வேறு எந்த ஆவணம் அதற்கு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கிரைய காலத்தில் பட்டா என் பெயரில்

இல்லாதபோது வாதிக்கு கிரையம் கொடுத்தது தவறு என்றால் பூர்வீக சொத்து என்பதால் கிரையம் கொடுத்தேன். நான் கிரையம் கொடுக்கும் காலத்தில் உரிமை மூல ஆவணங்கள் இல்லாமல் கிரையம் கொடுத்தேன் என்றால் என்னுடைய பாகப்பிரிவினை ஆவணத்தை வைத்து மட்டும் கிரையம் கொடுத்தேன். பாகப்பிரிவினை ஆவணத்தை வைத்து வழக்கு சொத்திற்கு நான் மட்டுமே உரிமையாளர் என்று கூற இயலாது என்றால் சரியல்ல.

4) வழக்கு சொத்திற்கு என் தகப்பனார் வரி செலுத்தியுள்ளார். அந்த இரசீதுகள் தொலைந்துவிட்டன. எனக்கோ என் குடும்பத்தாருக்கோ வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், வழக்கு சொத்தை பொறுத்து வாதிக்கு மோசடி கிரையம் கொடுத்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. பி.த.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் என் வீட்டில் இருந்த ஆவணங்களாகும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் 1937 ம் ஆண்டு குமாரசாமி பெயரிலுள்ள பட்டா பசலி ஆகும். 1928 ல் வரதப்பன் கிரையம் வாங்கிய பின்பு, 1937 ல் குமாரசாமி பெயரில் பட்டா இருப்பதாக கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. வருவாய் துறையினரை விசாரித்தால் தான் பி.த.சா.ஆ.1 மற்றும் 2 ம் உண்மை தன்மை வெளி வரும் என்று சொன்னால் சரிதான். குமாரசாமி மற்றும் பார்த்தசாரதி ஆகியோருக்கு வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.த.சா.ஆ.1 மற்றும்2 ல் கண்ட சொத்துக்களை 2010 ம் ஆண்டு பாகப்பிரிவினையில் பிரித்துக் கொள்ளவில்லை.

5) குமாரசாமி, மற்றவரகள் 1944ம் வருடம் பாகம் பிரித்து கொண்டார்கள். அதற்கான ஆவணத்தை நான் வைத்துள்ளேன். அவ்வாறு எவ்வித ஆவணமும் இல்லை என்றாலும், இருந்திருந்தால் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் முன்னோருக்கு வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், நான் கூறும் பாகப்பிரிவினையும் பொய் என்று சொன்னால் சரியல்ல. மதுராந்தகம் வட்டாட்சியர் மற்றும் சார்ஆட்சியர் ஆகியோர் பட்டா குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கவில்லை. எனக்கு உரிமை இல்லாத சொத்தை 1ம் வாதிக்கு கிரையம் கொடுத்து அவருக்கு மனகஷ்டம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே, வாதிகள் கோரியவாறு தீர்ப்பளிக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடியும் நேரம் 12.41PM

**மறுவிசாரணை–இல்லை.**